DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 138/2024

PROSECUTION WITNESS No - PW- 10

| | | | |
|---|---|---|---|
| Name : | ராஜ்குமார் | Caste: | |
| Father Name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of April 2026.

எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரில்லை. அவருக்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது திருப்பூர் மாநகரம் வீரபாண்டி காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2014 ம் தேதி திருப்புவனம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 27.06.2014 ல் காலை 09.00 மணிக்கு கனகவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று சார்பு ஆய்வாளர் ராஜேந்திரபிரசாத் என்பவர் நிலைய குற்ற எண். 251/2014 இதச பிரிவு 302 ன் படி பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்கு கோப்பினை பெற்று அன்று காலை 10.30 மணியளவில் வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராமநாதன், சுப்பிரமணியன் முன்னிலையில் மாதிரி வரைபடம் தயாரித்து சம்பவ இடத்தின் பார்வை மகஜரும் தயாரித்தேன். மேற்படி நான் தயாரித்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவ இடத்தில் ரத்தம் பட்ட மண், ரத்தம் படாத மண் குறித்து மகஜர் அத்தாட்சி தயாரித்தேன். மேலும் அதே இடத்தில் சாட்சிகள் ராமநாதன், சுப்பிரமணியன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் இறந்து போன சங்கரநாராயணன் என்பவரது பிரேதத்தின் மீது பகல் 12.00 மணிக்கு மதுரை அரசு மருத்துவமனை

சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். மேற்படி பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பிரேத விசாரணை அறிக்கை சாட்சிகளான கனகவேல், பிரேமா, மற்றும் சிவா, கீர்த்திகா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் நிலையம் வந்து இவ்வழக்கில் பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்த காவலர் ராஜ்குமாரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் அவர் மருத்துவமனையில் இருந்து இறந்தவரின் கைலி, சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட ரத்தம் பட்ட சிமெண்ட்துகள், ரத்தம் படாத சிமெண்ட்துகள் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்கள் குறித்த படிவம் 91 முறையே **அ.சா.ஆ.16** மற்றும் **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கையை உரிய நீதிமன்றத்தில் சமர்ப்பித்த காவலர் மீனாட்சிசுந்தரம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கடந்த 29.06.2014 அன்று காலை 07.00 மணியளவில் வழக்கில் தொடர்புடைய எதிரி சிவக்குமார் என்பவரை திருப்புவனம் நகர் மையப்பகுதியில் உள்ள ராமையா காம்பளக்சில் வைத்து சாட்சிகள் சந்திரசேகர், செண்பகமூர்த்தி, அழகர் ஆகியோர்களை சாட்சிகளாக வைத்து எதிரியை கைது செய்ய அவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் எதிரி சம்பவ இடத்திற்கு அருகில் அன்று காலை 10.00 மணியளவில் எடுத்து ஒப்படைத்த சுமார் 97 செ.மீ. நீளமுள்ள கூர்மையான கடப்பாரையை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரியை உரிய காவல் அடைப்பிற்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கில் கைப்பற்றிய கடப்பாரையை படிவம் 91 மூலம்

அன்றைய தினமே உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 91 **அ.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் சம்பவ இடத்திலேயே அன்றைய தினம் சாட்சி கனகவேல் என்வரிடம் கூடுதல் வாக்குமூலம் பெற்றேன். மேலும் சாட்சிகள் சந்திரசேகர், கார்த்தி, பிச்சுமணி, வெள்ளைச்சாமி, மகாராஜன், மாடசாமி, சின்னப்பாண்டி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் கைப்பற்றிய பொருட்களை தடய அறிவியல் கூடத்திற்கு அனுப்பி வைத்தேன். இந்நிலையில் நான் பணிமாறுதலில் கோவை மாவட்டத்திற்கு சென்றுவிட்டதால் நான் தயாரித்த வழக்கு கோப்பை என்னிடம் பொறுப்பை பெற்ற புதிய காவல் ஆய்வாளர் முகமது பரகத்துல்லா என்பவரிடம் ஒப்படைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.13 முதல் தகவல் அறிக்கையில் முன்புறத்தில் சம்பவ நேரம் 22 என்பதில் 2 என்ற ஒரு எண் மட்டும் அழுத்தமாக எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் எதிரியின் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதேபோல் புகாரிலும் எதிரியின் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் புகார்தாரர் தனது சொந்த ஊரான தூத்துக்குடியில் இருந்து எத்தனை மணிக்கு வந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் புகார்தாரரின் கையெழுத்து முதல் தகவல் அறிக்கையில் காலம் எண்.14 ல் இல்லை என்றால் சரிதான். அதேபோல் முதல் தகவல் அறிக்கையில் காலம் எண்.15 ல் எத்தனை மணிக்கு இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நேரம் குறித்து எழுதப்பட்டதா என்றால் எழுதவில்லை. புகார்தாரருக்கு வழக்கு சம்பவம் குறித்து யார் தகவல் சொன்னார் என்ற விவரம் புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் காயம்பபட்டவரை 108 வாகனத்தில் ஏற்றி சென்றதாக சொல்லப்படும் சாட்சி சின்னப்பாண்டி எதிரியை பார்த்ததாக எனது

விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோன்று சாட்சிகள் சந்திரசேகர், கார்த்தி, பிச்சைமணி ஆகியோர்கள் காயம்பட்ட நபரை தாங்கள் 108 ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பியதாக சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள். மேற்படி சாட்சிகள் மருத்துவமனைக்கு உடன் சென்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் காயம்பட்ட நபரை 108 ஆம்புலன்சில் அனுப்பிவிட்டதாக சொன்னார்கள். மாதிரி வரைபடத்தில் சாட்சிகள் கார்த்தி, பிச்சைமணி வீடுகள் சம்பவ இடத்திற்கு பக்கத்தில் உள்ளதாக காண்பிக்கவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் சாட்சி சந்திரசேகர் எதிரியானவர் ஆந்திரா மற்றும் கர்நாடக பகுதியை சார்ந்தவர் என்று இரு மாநிலத்தின் பெயரையும் குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. எனது விசாரணையில் சாட்சி சந்திரசேகர் தான் வேலை பார்த்த இடத்தில் 15 நாட்களுக்கு முன் வேலைக்கு வந்ததாகவும் எதிரி ஒரு வாரத்திற்கு முன் வந்தததாகவும் குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அவர் 15 நாட்களுக்கு முன் வேலைக்கு வந்ததாக சொல்லியுள்ளார். எனது விசாரணையில் சம்பவ இடம் மின்இணைப்பு வசதியுள்ள இடமென்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அது வசிக்கும் பகுதி என்பதால் மின்இணைப்பு உள்ள பகுதி என்பதை உணர்ந்து நான் தனியாக குறிப்பிடவில்லை. அந்த இடத்தில் மின் கம்பம் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். சாட்சிகள் சந்திரசேகர், கார்த்தி, பிச்சைமணி ஆகியோர்கள் எதிரியை விளக்கு வெளிச்சத்தில் பார்த்ததாக சொல்லியுள்ளனரா என்றால் எதிரியை பார்த்ததாக மட்டும் சொல்லியுள்ளனர். நான் தயாரித்த மாதிரி வரைபடத்தில் சான்று பொருள் கடப்பாரையை சம்பவ இடத்தில் கிடந்ததாக குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான். எதிரியை நான் கைது செய்ததாக சொல்லும் திருப்புவனம் ராமையா காம்பளக்சில் எத்தனை அறைகள் உள்ளது என்றால் சுமார் 10 அறைகள் உள்ளது. நான் எதிரியை கைது செய்வதற்கு எவ்வளவு நேரத்திற்கு முன்பாக கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல்

சொன்னேன் என்றால் சுமார் 15 நிமிடங்களுக்கு முன் சொன்னேன். திருப்புவனம் நகர் எல்லைக்குள் உள்ள கிராம நிர்வாக அலுவலரை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது விசாரணையில் சம்பவ நிகழ்வின் போது கட்டிடத்தின் உரிமையாளரும் இறந்தவர் மற்றும் எதிரியின் முதலாளியுமான நபர் சம்பவ காலத்தில் அங்கு இருந்தாரா என்று தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன் அவர் அங்குதான் இருந்தார். சம்பவ காலகட்டத்தில் கட்டிடத்தின் உரிமையாளர் தான் உரிமையாளர் என்ற முறையில் புகார் எதுவும் இவ்வழக்கு தொடர்பாக கொடுத்தாரா என்றால் இல்லை. கைப்பற்றிய ஆயுதமான கடப்பாரையில் எதிரியின் கைரேகை உள்ளதா என்பதை ஆய்வு செய்ய பரிசோதனை அறிக்கை எதுவும் செய்யப்பட்டதா என்றால் இல்லை. நான் தயாரித்த கைப்பற்றுதல் மகஜரில் கடப்பாரை எங்கிருந்து கைப்பற்றப்பட்டது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எந்த இடத்திலிருந்து என்று முதல் காலத்திலேயே சொல்லியுள்ளேன். அது கைப்பற்றிய இடமென்று வாசகம் இல்லையென்றால் மகஜர் தயாரிக்கப்பட்ட இடம் என்ற வாசகம் அதைத்தான் குறிக்கும் என்று குறித்துள்ளேன். ரத்தம் பட்ட கடப்பாரை என்று நான் அத்தாட்சியில் எழுதவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் இறந்த நபரின் குடும்பத்தினர் பாண்டிச்சேரியில் வசித்து வந்தார்கள். என்ற விவரம் தெரியுமா என்றால் தெரிந்து கொண்டேன். அவர்களுக்கு இறந்த செய்தி எவ்வாறு யாரால் தெரிவிக்கப்பட்டது என்று விசாரணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அதுபற்றி ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும அ.சா.ஆ.12 புகாரில் யாரோ மர்ம நபர்கள் தாக்கியதால் சங்கரநாராயணன் இறந்துவிட்டார் என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். புகார்தாரர் தான் கொடுத்த புகாரில் பலர் தாக்கிவிட்டதாக பன்மையில் தாக்கயிதாகவும் காயம் ஏற்படுத்தியதாகவும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அவர் வெளியூரிலிருந்து வந்து இறந்தவரை பார்த்தவுடன் உடனடியாக புகார் கொடுக்கவேண்டுமென்பதால் அவ்வாறு

சொல்லியுள்ளார். எதிரி சிவக்குமாரை கைது செய்த விவர குறிப்பில் உறவினர் யாரிடம் தெரிவித்து கைது செய்யப்பட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சாந்தா என்பவருக்கு தகவல் கொடுத்து கைது செய்துள்ளேன். மேற்படி கைது குறிப்பனையில் குறிப்பிடப்பட்டுள்ள சாந்தா என்பவர் எதிரிக்கு என்ன உறவு முறை என்றால் அக்கா உறவு முறை என்று தெரிந்து கொண்டேன். ஆனால் அதை நான் கைது குறிப்பானையில் குறிப்பிடவில்லை. சா.பொ.1 கடப்பாரையை எதிரியை கைது செய்த ராமையா காம்பளக்சில் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரியை கைது செய்தபோது அவரது மொழி குறித்த பேச்சை புரிந்து கொள்வதற்கு மொழி பெயர்ப்பாளரான அழகர் என்பவரை நான் எப்போது வரவழைத்தேன் என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை. நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும் எதிரி யார் என்று தெரியாத நிலையில் வழக்கு சம்பவம் நடைபெற்று 3 நாட்களுக்குப்பின் பின் யோசனையின் பேரில் எதிரியை கைது செய்து ஆவணங்கள் தயார் செய்து இவ்வழக்கின் குற்றவாளியாக சித்தரித்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை.</u>** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.01 17:33:27 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை